இளவாலை - நாதோலை

# அருள்மிகு முத்துமாரியம்பாள் திருவூஞ்சல்

கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை

மகா கும்பாபிஷேக தின வெளியீடு
தாரண ஆனி அனுஷம்

உ
சிவமயம்

இளவாலை - நாதோலை

# அருள்மிகு முத்துமாரியம்பாள் திருவூஞ்சல்

கலாபூஷணம் பண்டிதர் சி.அப்புத்துரை

மகா கும்பாபிஷேக தின வெளியீடு
தாரண ஆனி அனுஷம்
2004.06.30

# வெளியீட்டு உரை

இளவாலை, நாதோலை முத்துமாரி அம்பாள் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யும் வாய்ப்பு, எங்கள் தலைமுறையினர்க்குக் கிடைத்த பெரும்பேறாகும். இன்ன காலத்தில் தோன்றியதென யாரும் அறுதியிட்டுக் கூறமுடியாத அநாதியானது இவ்வாலயம். எனது தாயார் செல்லம்மாவின் தந்தையார் கந்தவனத்தின் தந்தையாரான வேலுப்பிள்ளை (வேல் ஐயா) அவர்கள் இவ்வாலயத்தைப் பரிபாலித்துப் பூசைசெய்த வரலாற்றை நாம் அறிவோம். இவர் நூறாண்டு காலம் வாழ்ந்த பெருமைக்குரியவர்.

இளவாலை, நான்குதிசையும் மகோற்சவம் நடக்கும் ஆலயங்களைக் கொண்ட பேரூர் ஆகும். வடக்கே கீரிமலை நகுலேஸ்வரமும் கிழக்கே ஆனைவிழுந்தான் விக்னேஸ்வரர் ஆலயமும், தெற்கே பெரியவிளான் வடசேரி விக்னேஸ்வரர் ஆலயமும் மேற்கே மாரீசன் கூடல் கலப்பிராகிரி முருகன் ஆலயமும் தேரோடும் திருத்தலங்களாகவுள்ள பெருமைக்குரியவை. இளவாலை இவற்றின் நடுநாயகமாக, நாதோலை முத்துமாரியம்மன் கொலுவிருந்து அருள்பாலிக்கின்றார்.

இங்கு அநாதிகாலத்தில் இசைவல்லவர்கள் பலர் வாழ்ந்ததால் அவர்கள் இசைக்கும் சங்கீதத்தின் நாத அலைகள் நிறைந்ததால் இந்த இடம் நாத அலை (நாதோலை) எனப் பெயர் பெற்றதாகவும் பெரியவர்கள் சொல்வர். அதற்குச் சான்றாக அன்றுமுதல் இன்று வரை

இவ்வாலய பரிபாலன பூசகர் பரம்பரையினர் இசை வல்லவர்களாகச் சிறப்பாக மக்கள் கலை எனப்படும் கிராமிய இசைகளான காவடி, கரகம், கூத்து, சிந்து, பள்ளு, தெம்மாங்கு, கோலாட்டம், வசந்தன், ஊஞ்சல், பாடல்களில் ஈடுபாடு மிக்கவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது. முத்துமாரியம்மன் வழிபாட்டிற் பாடலும் ஆடலும் முக்கியத்துவம் பெறுவதும் கவனிக்கத்தக்கது.

ஈழப்போர் காலத்திற் கோயில் முற்றாக அழிந்த போது அம்பாளுக்குரிய ஊஞ்சற் பாடலும் அழிந்துவிட்டது. புதுக்கோயில் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்யும் இவ்வேளையில் அம்பாளுக்குப் புதிதாக ஒரு திருவூஞ்சல் பாடித் தருமாறு அம்பாளைக் குல தெய்வமாகக் கொண்ட மயிலங்கூடல் கலாபூஷணம், பண்டிதர், சைவப்புலவர் சிறீரங்கம் அப்புத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களைக் கேட்டபோது அவர் மனமுவந்து ஊஞ்சலைப்பாடி அச்சிட்டு அம்பாளுக்கு அர்ப்பணம் செய்துள்ளார்கள். அவருக்கு அம்பாளின் அருள் கிடைக்கவேண்டுமென வேண்டித் தொழுது நன்றிகூறுகின்றேன்.

கும்பாபிஷேக வெளியீடாக (30.06.2004) இன்று வெளிவரும் இந்நூல் மூலம் வரும் பணம் முழுவதும் அம்பாளின் திருப்பணிக்கே பயன்படுத்தப்படும்.

முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
நாதோலை,
இளவாலை.

**சின்னையா வாமதேவன்.**
(பரம்பரைப் பரிபாலகரும், பூசகரும்,
பரிபாலன சபைத் தலைவரும்)

30.06.2004

உ
சிவமயம்

# இளவாலை - நாதோலை
# அருள்மிகு முத்துமாரி யம்பாள் திருவூஞ்சல்

## காப்பு

சீராரும் ஈழவள தேயத் தாயின்
சிவப்பொலிவுத் திருவாரும் நகுலைப் பங்கில்
ஏராரும் நாதஅலை இனித்தே ஏங்க
இசைஞானம் ஒளிருவதாம் ஊரில் வைகும்
பேராரும் திருமகளாம் முத்து மாரிப்
பெருமாட்டிக் குவப்பாயோர் ஊஞ்சல் பாடக்
காரானைக் கருதிக்கை குவித்தேன் நாவிற்
கண்டாவாய் கழலிணைகள் காப்ப தாமே.

## பதிகம்

தேமதுரத் தேவாரம் தூண்க ளாகத்
திருவொளிரும் வாசகஞ்சீர் விட்ட மாகப்
பாமகள்தேர் இசைப்பாடல் பல்லாண் டாய
பலவிழைசேர் திருமந்(தி)ரம் கயிற தாகச்
சேமமெனும் பிரபந்தம் பலகை யாகத்
தேர்பெரிய புராணமெனும் பீட மீதில்
ஏமமளி நாதஅலை மாரி அம்மே
எய்தியமர்ந் தெமக்கருள்வாய் ஆடீ ரூஞ்சல் 1.

சிவஞான போதமுயர் தண்ட தாகச்
சிறந்தொளிருஞ் சித்தியதன் தகழி யாக
நவமாய பொருளுணர்வுச் சிவப்(பி)ர காசம்
நயந்தேர்வுத் திரியென்றாய் நண்ணி நிற்பச்
சிவசாத்ர உண்மைகளாம் நெய்யை ஊற்றித்
தேர்ந்தஅன்புச் சுடரேற்றி விளங்க வைத்துச்
சிவமயமாம் நாதஅலை முத்து மாரிச்
சின்மயமே எமக்கருள்வாய் ஆடீ ரூஞ்சல் 2.

அரிஅயனார் அழகுவடந் தொட்டே யாட்ட
அனிந்திதையுங் கமலினியுங் கவரி வீச
எரிமகனோ டுடுமகனும் சுடர்கள் தாங்க
இரவியொடு சந்திரனும் கவிகை தாங்கப்
பரிவாயா ரூரன்தமிழ் வேத மோதப்
பனிநீரைப் பக்கமெலாம் வருணன் வீச
அரியவளெம் நாதஅலை முத்து மாரி
அம்மையினி தெமக்கருள்வாய் ஆடீ ரூஞ்சல் 3.

தேவாரத் திருமுறையைத் திளைத்தோர் பாடத்
திருமறையாம் வேதத்தைத் தேர்ந்தோர் ஓத
நாவாரப் பயிலுமிசை நாத வெள்ளம்
நாதசுர இசையுடனாய் நமையமுத்தத்
தேவாய அன்னையருள் திறந்தேர் வாய்ப்புத்
தெய்வநினை வுடனாகும் திருவெ மக்காம்
காவாயெம் நாதஅலை மாரி அம்மே
கருத்தொன்றி எமக்கருள்வாய் ஆடீ ரூஞ்சல் 4.

கண்டெனலாம் நாதசுரம் கரும்பின் பாகாய்க்
கனிந்திசைக்க வட்டமுள மேள மார்ப்ப
அண்டமெலாம் வயமழிய உடுக்கை மொந்தை
அனைவரையும் அகமாக்கி ஆர்த்து நிற்பப்
பண்டையுள வளையினிசை பாரித் தேங்கப்
பல்லியங்கள் ஒன்றித்தே உவப்பா யோங்க
இண்டையணி நாதஅலை மாரி யம்மே
இனிதெமக்கு மருளுவையே ஆடீ ரூஞ்சல் 5.

செந்நெல்விளை கழனிநிலம் வடபா லாகத்
திருவெனலாம் பூலோக கற்ப கத்தை
அந்நிலையின் தெற்கினிலே மழைநீர் வார
அமைவாய்க்காற் புறந்தெற்கில் அமைதல் காண்போம்
முந்திரிகை வாழைபலா தோடை மாவாம்
முதல்தென்னை வெற்றிலையந் திரானைச் செல்வம்
வந்துநிறை நாதஅலை மாரி யம்மே
வளநிறைந்தே எமக்கருள்வாய் ஆடீ ரூஞ்சல் 6.

இந்தனைவாழ் சீரியரோ டிளவா லைசேர்
ஏராளர் உயனையினிற் பொன்வி ளைப்போர்
சிந்தனைச்சீர்ச் செல்வந்தர் மயிலங் கூடல்
சீராளர் சேர்கருகம் பனையி லுள்ளோர்
வந்தனைசெய் துச்சலையில் வயல்வி ளைப்போர்
வந்தணைந்து வழிபட்டு வாழ்த்தி நிற்கும்
சொந்தஇறை நாதஅலை மாரி அம்மே
துயரகற்றி எமக்கருள்வாய் ஆடீ ரூஞ்சல் 7.

அடியவரை அணைத்துன்னோ டாண்டு கொள்வாய்
அபிராமிப் பட்டர்தம தகத்தில் தோய்ந்து
நெடியபிழை குடிகேடன் றென்று ணர்த்தி
நிர்மலனாய் அரசுமுனே நிற்க வைத்தாய்
பொடியெனவே எமதுவினை பொரிந்து போகப்
புண்ணியப்பே றெம்முதல்வி புகல ளிப்பாய்
துடியிடையாய் நாதஅலை முத்து மாரி
தூயஅம்மை எமக்கருள்வாய் ஆடீ ரூஞ்சல் 8.

ஒளிகாலுந் தரளவடம் ஒளிர்ந்தே யாட
ஒப்பரிய ஊஞ்சலுமங் குயர்ந்தே யாட
அளியினொடாம் அலரிமலர் மாலை யாட
அரண்டுதொழு மடியர்வினை அஞ்சி யோடத்
துளியெனலாந் துன்பங்கள் துவண்டே யோடத்
தொழுமடியர் இன்பத்துட் டிளைத்தே யாட
அளியவளே நாதஅலை முத்து மாரி
அம்மையினி தெமக்கருள்வாய் யாடீ ரூஞ்சல் 9.

கம்பன்கவிக் காம்கிழவி யாடீ ரூஞ்சல்
கழனிபங்கை விழைபவளே யாடீ ரூஞ்சல்
செம்பவள மேனியளே யாடீ ரூஞ்சல்
தீந்தமிழ்த்தேன் ஆர்பவளே யாடீ ரூஞ்சல்
அந்தரள மாலையினாய் ஆடீ ரூஞ்சல்
அமுபாலற் கமுதளித்தாய் ஆடீ ரூஞ்சல்
அம்புவியில் நாதஅலை முத்து மாரி
அம்மையினி தெமக்கருள்வாய் ஆடீ ரூஞ்சல் 10.

## வாழி

அருமறைகள் திருமுறைகள் அறநூல் வாழி
ஆனினமந் தணர்சான்றோர் அறவோர் வாழி
பெருநிதியெம் நீறுங்கண் டிகையும் வாழி
பேசரிய கற்பிலுயர் பெண்கள் வாழி
கருதுமுயர் வான்வாழி கழனி வாழி
கடவுளுறை சினகரங்கள் தாமும் வாழி
பொருவரிய நாதஅலை மாரி யம்மே
புனிதநிறை வாழ்வருளி வாழி வாழி.

## எச்சரீக்கை

திங்கள்ஒளிர் வதனத்தினை தேவி எச்சரீக்கை
திகழார்நுதல் நயனத்தினை திருவே எச்சரீக்கை
தங்கும்நிலை நாதஅலை தாயே எச்சரீக்கை
தயவாயருள் கழனிக்கரைத் தருவே எச்சரீக்கை

திருமாலவன் தங்கையெனத் திகழ்ந்தாய் எச்சரீக்கை
தேரிமவான் மகளாயினை தெளிந்தோம் எச்சரீக்கை
ஒருமீனவன் மகளென்றனர் ஒளியே எச்சரீக்கை
உலகத்திருள் ஒழிக்கும்முதல் உணர்ந்தோம் எச்சரீக்கை

## பராக்கு

சீராரும் நாதஅலைத் திருவே பராக்கு
சிவனவனின் பங்கிலுறை தேவி பராக்கு
நாரணனின் நல்லதங்கை நாரி பராக்கு
நாதஅலை நாயகியே நங்காய் பராக்கு

கொச்சைவரு பாலர்க்கமு தளித்தாய் பராக்கு
குழம்புபட்டர்க் கருளினையே கோவே பராக்கு
நச்சியுனை நாடினர்க்கு நல்லோய் பராக்கு
நாளுமெமக் கருள்புரியும் நளினீ பராக்கு.

## லாலி

அம்பிகையே மாரியம்மே லாலி லாலி
அரனவனின் அருந்துணையே லாலி லாலி
தும்பிமுகத் திறையனையே லாலி லாலி
தொழுமடியர் துரந்தரியே லாலி லாலி

சிறுவிதியின் வலிதொலைத்தாய் லாலி லாலி
சேரடியர்க் கருளுவையே லாலி லாலி
மறுவாழ்வை மதித்தழிப்பாய் லாலி லாலி
மனங்குளிரும் வாழ்வளிப்பாய் லாலி லாலி

## மங்களம்

நாதஅலை மாரியம்மே சுபமங்களம்
நமதுழவர் நலங்காப்பாய் சுபமங்களம்
போதமளித் தாளுவையே சுபமங்களம்
புனிதவுணர் வருளுவையே சுபமங்களம்

கழனியரு கமர்ந்தனையே சுபமங்களம்
கறைக்கண்டற் கருந்துணையே சுபமங்களம்
பழவடியர் பயில்நிதியே சுபமங்களம்
பற்றுடனே அணைத்தாள்வாய் சுபமங்களம்

மங்களம் மங்களம் மங்களம்

சுபம்

ஆக்கம் கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை